Officers to stock pesticides and fungicides in adequate quantities to meet the demand of this Rabi season. I assure the House that if any specific complaints regarding distribution of insecticides are brought to the notice of the Government, they will be immediately looked into for prompt action.

## IV. PRESENTATION OF REPORTS.

### (1) THE COMMITTEE ON GOVERNMENT ASSURANCES.

SRI K. SATTANATHA KARAYALAR : Mr. Deputy Speaker, Sir, I, Chairman of the Committee on Government Assurances, present the Sixth Report of the Committee on Government Assurances.

### (2) THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

SRI T. SAMPATH : Mr. Deputy Speaker, Sir, I, Chairman of the Committee on Subordinate Legislation, present the Sixth Report of the Committee on Subordinate Legislation.

## V. GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS (TRANSFERRED TERRITORY) INCORPORATED AND UNINCORPORATED DEVASWOMS BILL, 1959 (L.A. BILL NO. 25 OF 1959).

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Deputy Speaker, Sir, I move—

¶ "That the Madras (Transferred Territory) Incorporated and Unincorported Devaswoms Bill, 1959 (L.A. Bill No. 25 of 1959) be taken into consideration."

கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டமும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டைத் தாலூக்காவும் சென்ற 1956-ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தேதி இந்த ராஜ்யத்திற்கு மாற்றப்பட்டது. மாற்றப்படுவதற்கு முன்பு அந்தப் பிராந்தியத்திலுள்ள அறநிலையங்களையெல்லாம் முன்பு இருந்த தேவஸ்வம் போர்டு நிர்வகித்து வந்தது. அங்கு இருந்த தேவஸ்வம் போர்டானது 1950-ம் ஆண்டில் திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்தில் இயற்றப்பட்ட திருவாங்கூர்-கொச்சி அற நிலயப் பாதுகாப்புப் சட்டப்படி அமைந்தது. 1956-ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தேதி அந்தப் பிராந்தியங்கள் இந்த ராஜ்யத்திற்கு மாற்றப்பட்டவுடன், ஸ்டேட்ஸ் ரீ-ஆர்கனைஸேஷன் சட்டத்திலே—1956-வது வருஷத்திய சட்டத்திலே—122-வது பிரிவுப்படி இந்தப் பிராந்தியங்களுக்கு தேவஸ்வம் போர்டு இல்லை. இந்த ராஜ்யத்திலிருக்கிற அற நிலையப் பாதுகாப்பு போர்டு கமிஷனர் அவர்கள் தேவஸ்வம் போர்டு அதிகாரங்களைப் பெற்று, கமிஷனரே நிர்வகிப்பது என்று 122-வது பிரிவிலே இருக்கிறது. அது முதற்கொண்டு அற நிலயப் பாதுகாப்புக் கமிஷனர் அதிகாரங்களைச் செலுத்திக் கொண்டு வருகிறார். அந்த திருவாங்கூர்-கொச்சி சட்டம் ஓரளவுக்கு மாற்றப்பட்டது. அந்தப் பிராந்தியங்கள் இந்த ராஜ்யத்திற்கு மாற்றப்படுவதற்கு முன்பு இருந்த சட்டம் ஓரளவுக்கு